

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2050 ஜூலை 25, 2019 புரட்சி 18 முழக்கம் 28 விலை: ரூ.3.00

# காமராசர் சாதனைகள் – பறிபோகும் கல்வி உரிமைகளை கிராமம் கிராமமாக விளக்கினர்

# திருப்பூரில் கழகம் மூன்று நாள் பரப்புரைப் பயண எழுச்சி





*திருப்பூர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் காமராசர் பிறந்த நாள் விழாவை கல்வி உரிமை மீட்புப் பரப்புரையாக 3 நாள்கள் பொது மக்கள் பேராதரவுடன் நடத்தினர்.*

கல்விவள்ளல் காமராசர் பிறந்தநாளை முன்னிட்டு, திராவிடர் விடுதலைக் கழகம் திருப்பூர் மாவட்டம் சார்பில், கல்வி உரிமை மீட்பு பரப்புரைப் பயணம் மற்றும் தெருமுனை கூட்டங்கள் ஜூலை 14, 15, 16 தேதிகளில் திருப்பூர், பல்லடம், மடத்துக்குளம் ஆகிய பகுதிகளில் மூன்று நாள்கள் நடைபெற்றது. பரப்புரை பயணம் - கல்வியை மாநிலப்பட்டியலுக்கு மாற்று! தமிழ்நாட்டில் நீட் தேர்வை விலக்கு! புதிய கல்வி கொள்கை என்ற பெயரால் குலக்கல்வித் திட்டத்தை திணிக்காதே! போன்ற கோரிக்கைகளை முன் வைத்து பயணம் மற்றும் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றன. முதல் நாள் 14.07.2019 அன்று திருப்பூர் அம்மாபாளையத்தில் அமைந்துள்ள காமராசர் சிலைக்கு, கழக பொருளாளர் துரைசாமி மாலை அணிவித்தார். அதைத் தொடர்ந்து அம்மாபாளையத்தில் முகில் இராசு தலைமையில் தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது. அடுத்ததாக ஆத்துப்பாளையம் பகுதியில் சங்கீதா தலைமையில் தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது. அனுப்பூர்பாளையத்தில் முத்து தலைமையில் கூட்டம் நடைபெற்றது. மதிய உணவாக மாட்டுக்கறி, முகில் இராசு இல்லத்தில் வழங்கப்பட்டது. மதிய உணவிற்குப் பின் இராக்கியப்பாளையம் பிரிவில், தமிழ்நாடு மாணவர் கழக ஒருங்கிணைப்பாளர் பிராசாந்த் தலைமை யிலும், வெள்ளியங்காடு பகுதியில் பொள்ளாச்சி சபரி மற்றும் மாஸ்கோ நகரில் மாதவன் தலைமையிலும் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றன. முதல் நாள் கூட்டங்களில், கழக பரப்புரைச் செயலாளர் பால் பிரபாகரன், அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, பொருளாளர் துரைசாமி ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர். மடத்துக்குளம் மோகன் முதல் நாள் நிகழ்வுகளை தொகுத்து வழங்கினார்.

இரண்டாம் நாள் 15.07.2019 அன்று காலை 9 மணிக்கு பல்லடம் லக்ஷ்மி மில்ஸ் பகுதியில், சண்முகம் தலைமையில், தமிழ்நாடு மாணவர் கழக ஒருங்கிணைப்பாளர் தேன்மொழி முன்னிலையில் தெருமுனை கூட்டம் தொடங்கி நடைபெற்றது. அடுத்ததாக அய்யம் பாளையம் அரசுப் பள்ளியில் காமராசர் நிகழ்வு கொண்டாடப்பட்டது. அதில் பயணத் தோழர்களும் கலந்து கொண்டனர். காமராசரின் கல்வி சாதனைகள் குறித்து பள்ளி மாணவர்களுக்கு கழகப் பரப்புரை செயலாளர் பால் பிரபாகரன் விரிவாக கருத்துரை யாற்றினார். மேலும், அனுப்பட்டியில் பருதி இளம்வழுதி தலைமையிலும், செந்தேவன் முன்னிலையிலும் தெருமுனைக் கூட்டம் நடை பெற்றது. மதிய உணவாக மாட்டுக்கறி உணவை பருதி இளம்வழுதி மற்றும் கோவிந்தராசு ஏற்பாடு செய்திருந்தனர். மதிய உணவிற்குப் பின் மாலை எம்.ஜி.ஆர் சாலையில் செந்தேவன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

இரண்டாம் நாள் பயணத்தில், மடத்துக்குளம் மோகன், கழக அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன், பொருளாளர் துரைசாமி, முகில் இராசு ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

மூன்றாம் நாள் 16.07.2019 அன்று மடத்துக்குளம் கடத்தூர் பகுதியில் காலை 8:30 மணிக்கு அய்யப்பன் தலைமையில், கண்ணன், சரவணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. அடுத்ததாக காரத்தொழுவு பகுதியில் சு.சிவானந்தம் தலைமையில் நடைபெற்றது. கணியூர் பகுதியில் கண்ணன் தலைமை யிலும், மடத்துக்குளம் பகுதியில் திராவிடன் ஜின்னா தலைமையிலும் தெருமுனைக் கூட்டங்கள் நடை பெற்றன.

மதிய உணவை மடத்துக்குளம் மோகன் வழங்கினார். மதிய உணவு வேளையில் தமிழ்நாடு மாணவர் கழக ஒருங்கிணைப்பாளர் தேன்மொழியின் பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. உணவிற்குப் பின், குமரலிங்கம் பகுதியில் இராசேந்தின் தலைமையிலும், குத்திராபாளையம் பகுதியில் அய்யப்பன் தலைமை யிலும் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றன.

மூன்றாம் நாள் மடத்துக்குளம் பயணத்தில், இராசேந்திரன் (விசிக), சாந்துமுகமது (மதிமுக), பாருக் அலி (திமுக), மயில்சாமி (தி.க), சாமிநாதன் (தி.க), ஆர்.டி.எம். மாரியப்பன் (மாவட்டச் செயலாளர் மதிமுக), பன்னீர்செல்வம் (சி.பி.ஐ.-எம்) ஆகியோர் பயணங்களின் தெருமுனைக் கூட்டங்களில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

மேலும், கழகப் பரப்புரைச் செயலாளர் பால் பிரபாகரன், பொருளாளர் துரைசாமி, அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, பொள்ளாச்சி சபரி,



தமிழ்நாடு மாணவர் கழகம் தேன்மொழி, பொள்ளாச்சி வெள்ளிங்கிரி, மடத்துக்குளம் மோகன் ஆகியோர் மூன்றாம் நாள் தெருமுனைக் கூட்டங்களில் சிறப்புரையாற்றினர். பெரியார் பிஞ்சுகள் யாழினி, யாழிசை - கூட்டங்களில் பகுத்தறிவுப் பாடல்களைப் பாடி மக்களின் கவனங்களை ஈர்த்தனர்.

மூன்று நாள் பயணமும் மக்களின் பேராதரவுடன் நடைபெற்றது. திருப்பூர் நகரத்தை அடுத்த கிராமங்களில் பயணம் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. மத்திய பாஜக அரசு கிராமப்புற தமிழக மாணவர்களின் கல்வி வாய்ப்புகளை எவ்வாறு சீர் குலைக்கிறது என்பதை இப்பயணத்தின் மூலம் கிராமங்களுக்கு எடுத்துச் சென்றிருப்பது சிறப்பு வாய்ந்ததாகும்.

பயணத்தில் பங்கேற்றோர்: தமிழ்நாடு மாணவர் கழகம் பிரசாந்த், தேன்மொழி, கனல்மதி, வைத்தீஸ் வரி, மேட்டூர் தேன்மொழி, திருப்பூர் பார்வதி, சரசு, சங்கீதா, முத்து, தனபால், இராஜ சிங்கம், நீதிராசு, கருணாநிதி, மூர்த்தி, அகிலன், மாதவன், மணி, பருதி இளம்வழுதி, பல்லடம் சண்முகம், பொள்ளாச்சி, வெள்ளிங்கிரி, சபரி, ஆனந்த், விவேக், அரிதாசு, மடத்துக்குளம் மோகன், ஈரோடு இரத்தினசாமி, பால் பிரபாகரன், திருப்பூர் துரைசாமி, சூலூர் பன்னீர் செல்வம்

**– நமது செய்தியாளர்**

## பா.ஜ.க. ஆட்சியில் சர்வம் சமஸ்கிருத மயமே!

பா.ஜ.க. தேர்தல் அறிக்கையில் அனைத்து திட்டங்களுக்குமே முழுக்க முழுக்க சமஸ்கிருத பெயர் மட்டுமே வைக்கப்பட்டு இருந்தது. முக்கிய திட்டங்கள் அனைத்திற்கும் ஆங்கிலம், இந்தி என இரண்டிலும் பெயர் வைக்கப்படவில்லை. சமஸ்கிருதத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்கப்பட்டு இருந்தது.

தேர்தல் அறிக்கையின் தலைப்பு : சங்கல்ப் பாரத், செசாகத் பாரத்

பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட ஏற்கெனவே இருந்த புதிய திட்டங்களின் பெயர்கள் : பிரதான் மந்திரி கிசான் சம்மான் கிசான் சம்மான் நிதி யோஜனா, பிரதான் மந்திரி ஜன் ஆவாஜ் யோஜனா, சடக் நிர்மார் யோஜனா, பிரதான் மந்திரி ஆஷா யோஜனா, பிரதான் மந்திரி கிரிஷி கின்சாயி யோஜனா, உதாமஷில் உத்தர்பூர்வ யோஜனா, பாரத் மாலா பரியோஜனா, பிரதான் மந்திரி ஷேரெம்யோகி மந்தன் யோஜனா, பிரதான் மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா, ஸ்வாஸ்த் சுரக்ஷா யோசுனா, சம்மான் நிதி யோஜனா

# 11 மாத ஆட்சியில் வரலாற்றுத் தடம் பதித்தார் வி.பி.சிங்

- பாராளுமன்றத்திலும், சட்டமன்றங்களிலும் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினருக்கு, இட ஒதுக்கீட்டை மேலும் பத்து ஆண்டுக்கு நீட்டித்துச் சட்டமியற்றினார்.
- புத்த மதத்தைத் தழுவிய தாழ்த்தப்பட்டோருக்கும் இடஒதுக்கீடு உரிமைகளை அளித்தார்.
- தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான ஆணைக் குழுவுக்கு (கமிசன்) அமைச்சரக அதிகார உரிமையை வழங்கினார்.
- வானொலி, தொலைக்காட்சிகளில் ஆளுங்கட்சியின் ஆதிக்கத்தை மாற்றத் தன்னாட்சி உரிமம் வழங்கும் சட்ட மசோதாவைக் கொண்டு வந்தார்.
- அமைச்சர், முதலமைச்சர் உள்பட எவர்மீது ஊழல் புகார் வந்தாலும், அவற்றை விசாரிக்கும் (ஆராயும்) 'லோக்பால்' எனும் உயர்மட்ட ஆய்வுக் குழு அமைக்கச் சட்டமுன் வரைவுக் கொண்டுவரப்பட்டது, அவரது ஆட்சியில்தான்.
- அஞ்சலுறைகளைப் பிரித்துப் பார்ப்பது, தொலைபேசியின் மூலம் ஒட்டுக் கேட்பது போன்ற, மனித உரிமை மீறல்களுக்கு வழி வகுக்கும் அரசியல் சட்டத்தின் அய்ம்பத்தாறாவது பிரிவை நீக்கினார்.
- ஒரு மாநிலத்துக்கு மட்டும் தனியாக, அவசர நிலையை அறிவித்து, அடிப்படை உரிமையைப் பறிக்கும் அய்ம்பத்தொன்பதாவது சட்டத் திருத்தம் நீக்கப்பட்டது. (இது இராஜீவ் ஆட்சி காலத்தில் கொண்டு வந்த மனித உரிமைப் பறிப்பு விதி)
- 1984ஆம் ஆண்டுக்குப் பிறகு மாநில அரசுகள் கொண்டு வந்த அனைத்து நிலச் சீர்திருத்தச் சட்டங்களும் அரசியல் சட்டத்தின் ஒன்பதாவது பிரிவின்கீழ் கொண்டு வரப்பட்டு இச் சட்டங்களை எதிர்த்து நீதிமன்றம் செல்ல முடியாமல் தடுத்தார்.
- அனைத்து அரசியல் கட்சிகளுடன் கலந்து பேசித் தேர்தல் சீர்திருத்த மசோதா கொண்டு வந்தார். பிறகு பிரதமராக வந்த சந்திரசேகர் அதைக் கூட்டுப் பொறுப்புக் குழுவுக்கு அனுப்பிக் கிடப்பில் போட்டார்.
- பெண்களுக்கு 30 விழுக்காடு இடம் ஒதுக்கும் பஞ்சாயத்து ஆட்சி மசோதா கொண்டு வந்தார்.
- நகராட்சிகள் நன்முறையில் வளர்ச்சியடையத் தனிச் சட்டம் கொண்டு வந்தார்.
- வழக்கறிஞர்க்காகவும், ஏழையர்க்கும் பணமின்றி இலவச சட்ட உதவி பெற தனிச்சட்டம் கொண்டு வந்தார்.
- தொழில் உறவுக் கொள்கையில், இதற்கு முந்தைய அரசு கடைப்பிடித்த வழி முறைகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டார்.
- காங்கிரசு ஆட்சி, தொழிலாளர்க்கு எதிராகக் கொண்டு வந்திருந்த தொழில் உறவுக் கொள்கைகளை நீக்க புதிய தொழிலுறவுச் சட்டம் கொண்டு வருவதற்காகத் தொழிற் சங்கங்கள், தொழில் முகவர்கள், அரசு அலுவலர்கள் கொண்ட குழு அமைத்தார்.
- நிர்வாகத்தில் தொழிலாளர்க்கு மிகுந்த பங்களிப்புக் கொடுக்க மசோதா கொண்டு வந்து முத்தரப்புக் குழு அமைத்தார். மே நாள் விடுமுறை அறிவித்தார்.
- இந்திய அரசியல் சட்டத்தில் கூறப்பட்டிருந்தும், சுதந்திரத்துக்குப் பிறகு அமைக்கப்படாமலிருந்த, மாநிலங்களுக்கு இடையிலான கவுன்சில் அமைக்கப்பட்டது, அவரது ஆட்சியில்தான்.
- புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கரின் நூற்றாண்டுப் பிறந்த நாளில், அவருக்குப் பாரத இரத்தினா பட்டம் வழங்கிச் சிறப்புச் செய்தார். நாடாளுமன்றத்தின் மய்ய மண்டபத்தில், அம்பேத்கர் படம் வைக்கப்பட்டது. அம்பேத்கர் நூற்றாண்டு விழா நடத்தத் தேசியக் குழு அமைக்கப்பட்டது.
- பெண்கள் நலனுக்காக ஒரு தனி ஆணைக் குழுவினைச் சட்ட வடிவில் அமைத்து, குழுவிற்கு முக்கிய அதிகார உரிமைகளை வழங்கினார்.
- 1984ஆம் ஆண்டு தில்லியில் சீக்கியர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட படுகொலையில், கணவரை இழந்த சீக்கியப் பெண்களுக்கு வழங்கப்பட்ட மாத உதவித் தொகை, முந்நூற்றிலிருந்து, அய்ந்நூறாக உயர்த்தப்பட்டது.



**குறிப்பு:** (1984 இந்திராவைச் சுட்டுக் கொன்றதற்காகப் பழிவாங்கும் எண்ணத்தோடு, தில்லியிலும் மற்றும் சில பகுதிகளிலும் 6000 சீக்கியர்க்கு மேல் கொல்லப்பட்டனர்.

- சிறுபான்மை மக்கள் நலனுக்காக 16 அம்ச கொள்கைத் திட்டம் வகுத்தார்.
- முகமதுநபி பிறந்த நாளைத் தேசிய விடுமுறை நாளாக்கினார்.
- மீனவரின் எந்திரப் படகுக்குக் குறைந்த விலையில் டீசல் உட்பட சலுகைகள் அளித்தார்.
- தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டம் விலக்கப் பட்டது.
- சிறு தொழில் மற்றும் கைவினைத் தொழிலுக்கான 680 திட்டங்களுக்குக் கடன் வழங்கப்பட்டது.
- சிறு தொழில்களுக்கான முதலீடு ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாக உயர்த்தப்பட்டது. நடுத்தரத் தொழில்களுக்கு இதனை ரூ.35 இலட்சத்திலிருந்து ரூ.75 இலட்சமாக்கினார்.
- சிறு தொழில்களுக்கு உதவுவதற்காகவே, ரூ.680 கோடியில் ஒரு தனி வங்கி அமைத்தார். உழவர், உழவுத் தொழிலாளர், கைவினைஞர்க்குக் கடன் ரூ.10 இலட்சத்தைத் தள்ளுபடி செய்தார்.
- கோதுமை, நெல், கரும்பு, பருத்தி முதலியவற்றின் கொள்முதல் விலையை உயர்த்தினார்.
- வரவு செலவுத் திட்டத்தில் 49 விழுக்காட்டை விவசாயத்துக்கும், கிராமப்புறத்துக்கும் ஒதுக்கினார்.
- நகர்ப்புறத் துப்புரவு, தூய்மைக்காக ரூ. 4000 கோடி ஒதுக்கினார்.
- வளர்ச்சிப் பணிக்கு ஒதுக்கும் தொகையில் சரி பாதி, கிராமப்புறங்களுக்கு ஒதுக்கினார்.
- ஆண்டுக்கு 1.7 விழுக்காடு மட்டுமே உயர்ந்து வந்த வேலை வாய்ப்பை, 1990 முதல் ஆண்டுக்கு 3 விழுக்காடாக உயர்த்தினார்.
- அனைவருக்கும் வேலை என்ற அடிப்படை யில் வேலை கோரும் உரிமையை அரசியல் சட்டத்தில் அடிப்படை உரிமையாக்கும் திட்டத்தைத் தேசிய வளர்ச்சி அமைப்புக்கு முன் வைத்தார். இதற்காக முதலமைச்சர் குழுவை அமைத்தார். இக்குழு அரசியல் சட்டத்திருத்த மசோதாவையும், வேலை உறுதிப்பாட்டு மசோதாவையும் தயாரித்தது.
- பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, மைய அரசிலும் மையப் பொதுப் படிப்பு நிலையங்களிலும் 27 விழுக்காடு வேலை வாய்ப்பை ஒதுக்கீடு செய்யும் மண்டல் குழுவின் பரிந்துரையின் ஒரு பகுதியை நடைமுறைப்படுத்தினார்.
- கருநாடகத்தில் சொந்த கட்சி ஆட்சியிலிருந்தாலும் தமிழகக் கோரிக்கையையேற்று காவிரி நடுவர் மன்றம் அமைத்தார்.
- ஈழத்திலிருந்து இந்திய இராணுவத்தைத் திரும்பப் பெற உத்தரவிட்டார்.
- ஈழத் தமிழர் பிரச்சினைக்கான அரசியல் தீர்வை முன்னெடுக்கும் உரிமையை தமிழ்நாடு அரசுக்கு வழங்கி, விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடன் தமிழக முதல்வர்கலைஞரை பேச்சு வார்த்தை நடத்தச் செய்தார்.
- அரசு அலுவலகங்களில் தனது புகைப்படம் வேண்டாம் என்றவர். தனி விமானம் தவிர்த்து, பயணிகள் விமானத்திலேயே பயணித்தார்.

**சென்னை கூட்டத்தில் தோழர்கள் பேசியதிலிருந்து ஒரு தொகுப்பு**


"புரட்சிப் பெரியார் முழக்கம்"

ஆண்டுக்கட்டணம் ரூ.200

தொடர்புக்கு:
ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
7373684049 newsdvk@gmail.com


## அத்திவரதரின் அடுத்த கதி....?

முதியோர், கர்ப்பிணிகள், உடல்நலிவுற்றோர் மற்றும் அவர்களின் உதவியாளர்கள் 'அத்தி வரதர் தரிசனத்துக்கு வரவேண்டாம்' என்று தமிழக அரசின் காஞ்சி மாவட்ட நிர்வாகம் பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக அரசு செலவில் விளம்பரம் செய்திருக்கிறது.

"அத்திவரதரை தரிசனம் செய்து விட்டதாலேயே உங்களைக் காப்பாற்றி விடமாட்டார். அவருக்கு சக்தி இருக்கிறது என்றெல்லாம் நம்பி வராதீர்கள்" என்ற வாசகங்களையும் விளம்பரத்தில் சேர்த்து அறிவித்திருந்தால் பொது மக்களுக்கு எளிதாகப் புரிந்திருக்கும். பரவாயில்லை. எதற்கு வீண் வம்பு? பக்தர்களே, புரிந்து கொண்டால் சரி.

இதுவரை கூட்ட நெரிசல்களில் சிக்கி 7 பேர் உயிரிழந்துவிட்டனர். ஆபத்துக்கு உதவிட அவசர மருத்துவ சிகிச்சை, ஆக்சிஜன் சிலிண்டர் எல்லாம் தயார் நிலையில் இருப்பதாக தமிழக அரசு கூறுகிறது. என்னுடைய சக்தியை இப்படி எல்லாம் கேலி செய்வதா என்று கோபத்தில் அத்திவரதர் எழுந்து ஓடிப்போய் குளத்தில் மீண்டும் விழுந்து விடப் போகிறாரா என்ன? அப்படியே ஓடினாலும் காவல்துறை விட்டு விடுமா?

சரி; அத்திவரதர் இதுவரை குளத்துக்குள் படுத்த நிலையில் ஏன் இருந்தார் தெரியுமா? காரணங்களும் இப்போது ஜீயர்கள் வழியாக வெளிவரத் தொடங்கியிருக்கிறது.

"இஸ்லாமியர் படையெடுப்புகளிலிருந்து காப்பாற்றவே 'அத்திவரதர்' குளத்துக்குள் மறைத்து வைக்கப்பட்டார். இனி அந்தப் பயம் இல்லை. எனவே அத்திவரதரை குளத்துக்குள் கொண்டு போக வேண்டாம். வெளியிலேயே நிரந்தரமாக தரிசனத்துக்கு வைத்து விடலாம். அத்திவரதரும் எனது கனவிலே தோன்றி மீண்டும் குளத்துக்குக் கொண்டு போய் என்னை மூழ்கடித்து விடாதீர்கள் என்று என்னிடம் கேட்டுக் கொண்டுள்ளார்" என்று மணவாள மாமுனிகள் மடத்தின் தலைவர் சடகோப இராமானுஜ ஜீயர் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்திருக்கிறார்.

"அதெல்லாம் கூடாது; அத்திவரதரை மீண்டும் குளத்துக்குள்ளேயே படுக்க வைக்க வேண்டும்; 40 ஆண்டுகளுக்கு ஒருமுறை வெளியே வருவதால் தான் இவ்வளவு கூட்டம்; அதைப் புரிந்து கொள்ளுங்கள். நிரந்தரமாக தரிசனத்துக்கு வைத்தால் கூட்டம் வரவே வராது. இப்போதுகூட வரதராஜப் பெருமாள் கோயில் மூலவர் அத்திவரதர் நிரந்தரமாகத் தான் காட்சி தருகிறார். அவரை தரிசிக்கக் கூட்டம் வருவது இல்லையே" என்று எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார், திருவரங்கம் ஜீயர். சடகோப ஜீயர் கனவில் அத்திவரதர் வந்து கூறினார் என்பதை எல்லாம் திருவரங்கத்து ஜீயர் நம்பத் தயாராக இல்லை.

இந்த, 'கனவுக் கதைகள்' எல்லாம் அப்பாவி 'சூத்திர' பக்தர்களின் காதுகளில் பூ சுற்றுவதற்குத் தான் என்பது ஜீயர்களுக்குத் தெரியாதா என்ன?

அறநிலையத் துறை அதிகாரிகள், பக்திப் பழங்களாக பூத்துக் குலுங்கும் நமது அ.இ.அ.தி.மு.க. அமைச்சர்களின் கனவில் வந்து அத்திவரதர் அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று நிச்சயமாகக் கூற மாட்டார். இவர்கள் என்னதான் பக்தியில் முற்றிப் போயிருந்தாலும் நமது அமைச்சர்கள் எல்லாம் 'சூத்திரர்கள்' தானே? கடவுள் அவர்கள் கனவுகளில் எப்படி வருவார்?

ஆக, அத்திவரதர் மீண்டும் 'ஜலத்துக்குள்' போவாரா? பூமிக்கு மேலேயே இருப்பாரா என்பதை முடிவு எடுக்கும் அதிகாரம் அத்திவரதருக்கு இல்லை. முடிவெடுக்கும் உரிமை, அவரை வைத்து பக்தி - வணிகம் நடத்த விரும்பும் 'ஆன்மிக புருஷர்கள்' கையில் தான் இருக்கிறது.

'ஆண்டவர்களை' கருப்புச் சட்டைக்காரர்கள்கூட இப்படி எல்லாம் அவமதிப்பதில்லையே! நமது ஜீயர்கள் பெருமாளை பாடாய் படுத்தலாமா? என்கிறார், இன்னும் கடவுள் சக்தியை நம்பும் ஒரு அப்பாவி பக்தர்!

– கோடங்குடி மாரிமுத்து

# காமராசர், வி.பி.சிங் சாதனைகளை விளக்கிய எழுச்சி பொதுக் கூட்டம்







சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக சார்பில் சமூக நீதித் தூண்கள் காமராசர்–வி.பி. சிங் சாதனைகளை நினைவுகூரும் பொதுக் கூட்டம் ஜூலை 21, 2019 அன்று தியாகராயர் நகர் முத்து ரங்கன் சாலையில் மாலை 7 மணியளவில் பறை இசையுடன் தொடங்கியது. விரட்டு கலைக் குழுவினர் பெரியார், மணியம்மையார், அம்பேத்கர், காமராசர், வி.பி. சிங் குறித்த எழுச்சிப் பாடல்களையும் ‘நீட்’ பாதிப்புகளை விளக்கும் நாடகங்களையும் நடத்தினர். நடுவண் அரசு அறிமுகப்படுத்தியுள்ள புதிய கல்வித் திட்டம் குறித்த விமர்சனப் பாடல் அனைவரையும் கவர்ந்தது. சைதைப் பகுதி கழகத் தோழர் ப. மனோகரன் வரவேற்புரை யாற்றிட தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர் நிகழ்வுக்குத் தலைமை தாங்கி, காமராசர்–வி.பி.சிங் சாதனைகளை நினைவு கூர்ந்து சமூக நீதி உரிமைகள் தமிழகத்தில் படிப்படியாக பறிக்கப்பட்டு பார்ப்பனியம் வேகமாக தலைதூக்கி வருவதை சுட்டிக் காட்டினார்.




இளைஞர் இயக்கத்தின் நிறுவனரும் பெரியாரிஸ்டுமான மருத்துவர் நா. எழிலன், காமராசரால் சத்துணவுத் திட்டம் கொண்டு வரப்பட்ட போது எழுந்த எதிர்ப்புகளையும் பிறகு பிரதமர் நேருவிடம் பேசி அதற்கான நிதி ஒதுக்கீட்டுக்கு காமராசர் எடுத்த முயற்சிகளையும் மக்களிடம் நன்கொடையாகத் திரட்டி இத் திட்டத்தை உறுதியோடு காமராசர் அமுல்படுத்தியதையும் அப்போது அவருக்கு உறுதுணையாக இருந்த பள்ளிக் கல்வி அதிகாரி நெ.து. சுந்தர வடிவேலு பதிவு செய்த வரலாற்றிலிருந்து எடுத்துக் காட்டினார். தமிழகத்தில் தொடங்கி வைக்கப்பட்ட இத்திட்டம் பிறகு இந்தியா முழுதும் பின்பற்றக்கூடிய திட்டமாக மாறியதை சுட்டிக் காட்டினார். தொடர்ந்து நடுவண் ஆட்சி இப்போது கொண்டு வந்திருக்கும் கல்விக் கொள்கையால் சமூக நீதிக்கும் கிராமப் புற மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் தடையாக இருக்கும் ஆபத்துகளை விளக்கிப் பேசினார்.

தொடர்ந்து விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் பங்கேற்றுப் பேசிய ஆளூர் ஷாநவாஸ் - கல்விக் கொள்கையில் சமூகநீதிக்கு எதிராக இடம் பெற்றுள்ள கல்வித் திட்டங்களை விளக்கினார். கல்விக் கொள்கை மீது கருத்துகளைக் கேட்பதாக நடுவண் அரசு கூறும்போது கருத்து தெரிவித்த நடிகர் சூர்யாவை பா.ஜ.க.வினர் மிரட்டுவது ஏன் என்று கேள்வி எழுப்பினார். கல்விக் கொள்கையை ஆதரித் துப் பேசினால் மட்டும் தான் கருத்தாக ஏற்பீர்களா என்று கேட்டார். தமிழ்நாடு என்றும் பெரியார் மண் தான் என்பதை நாம் மதவெறி சக்திகளுக்கு உறுதிப்படுத்துவோம் என்று சூளுரைத்தார்.

தொடர்ந்து பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பேசினார். “காமராசர்-வி.பி.சிங் - சாதனைகளை நினைவு கூர்ந்தார். இரண்டு தலைவர்களுமே பார்ப்பனர்களால் வெறுக்கப் பட்டவர்கள். காரணம் அவர்கள் சமூகநீதியில் உறுதியாக இருந்தார்கள். பதவி அதிகாரங்களைப் பற்றிக் கவலைப்படாதவர்கள் என்றார்.

கோட்சே வழியாக பார்ப்பன இந்துமதவெறி, காந்தியை சுட்டது. துப்பாக்கியால் சுட்டவுடன் காந்தி உயிர் போய்விட்டது. வி.பி. சிங் உயிரை அதே இந்து மதவெறி படிப்படியாகப் பறித்தது. பாபர் மசூதி இடிக்கப்பட்டவுடன், மசூதியை இடித்தவர்களைக் கைது செய்யாததைக் கண்டித்து பம்பாயில் தனது தோழர்களுடன் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார் வி.பி.சிங். மகாராஷ்டிராவில் நடந்த பா.ஜ.க., சிவசேனை ஆட்சிப் போராட்டத்தை அலட்சியப்படுத்தியது. இரண்டொரு நாட்களில் வி.பி.சிங் போராட்டம் நடத்திய இடத்துக்கு அருகே ‘உண்ணும் விரதம்’ என்று எதிர்ப்புப் போராட்டம் நடத்தி அவமானப் படுத்தினார்கள். ‘இதற்கு என்னுடைய பதில் - இனி தண்ணீர்கூட குடிக்காமல் உண்ணா விரதத்தைத் தொடரப் போகிறேன்’ என்று அறிவித்தார் வி.பி. சிங். மகாராஷ்டிர இந்துத்துவ ஆட்சி, அப்படியே

(4ஆம் பக்கம்)

## இதுதான் பெரியார் மண்




பக்தர்கள் ஊர்வலம் கடந்து செல்லும் காட்சி

சென்னை தியாகராயர் நகரில் கழகக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. மேடையில் மருத்துவர் எழிலன் பேசிக் கொண்டிருந்தார். “கூட்டம் நடக்கும் பகுதியில் அலகு குத்திக் கொண்டு சாமி ஆடிக் கொண்டு ‘ஓம் மகா சக்தி’ என்று முழங்கிக் கொண்டு ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் மேளதாளத்தோடு ஊர்வலமாகக் கோயிலை நோக்கிப் போகிறார்கள். அவ்வளவு பேரும் நம்முடைய ஒடுக்கப்பட்ட சமுதாயத்துக் குடும்பத்தினர். மேடையில் பேசிக் கொண்டிருந்த மருத்துவர் எழிலன், பக்தி ஊர்வலம் சென்று முடியும் வரை தனது பேச்சை நிறுத்திக் கொண்டார். ஊர்வலம் சென்று முடிந்த பிறகு இந்த மக்களின் உரிமைகளுக்காகத் தான் பெரியார் தொண்டர்களாகிய நாம் போராடி வருகிறோம்” என்று கூறி தனது பேச்சைத் தொடர்ந்தார்.

அடுத்து பேச வந்த ஆளூர் ஷா நவாஸ், “இங்கே அமைதியாக பக்தி ஊர்வலத்திற்கு வழிவிட்டு பேச்சைக்கூட நிறுத்திக் கொண்டு பக்தர்கள் கடந்து செல்ல அனுமதித்தோம். இதுதான் பெரியார் மண்! நினைத்துப் பாருங்கள். இதுவே விநாயகன் ஊர்வலமாக இருந்திருந்தால் எப்படி நடந்து கொண்டிருப்பார்கள்? மசூதி வழியாகவே போவோம் என்பார்கள். ஆத்திரமூட்டும் முழக்கமிடுவார்கள். வன்முறைக்குக் காத்திருப்பார்கள். போலீஸ் படை சூழ்ந்து நிற்கும். இங்கே அதுபோன்ற எந்த அசம்பாவிதமும் இல்லை. இப்படித்தான் பெரியார் தனது இயக்கத்தை பக்குவப்படுத்தியிருக்கிறார்” என்று கூறியபோது பலத்த கரவொலி எழுந்தது.

கழகக் கூட்ட மேடைக்குப் பின்னால் சற்று தூரத்தில் அம்மன் விழாவும் தீமிதியும்கூட நடந்து கொண்டிருந்தது.

– நமது செய்தியாளர்

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

### பெட்ரிசியன் கல்லூரி காமராசர் விழாவில் விடுதலை இராசேந்திரன் பேச்சு

# மாணவச் செல்வங்களே! ஜாதி எதிர்ப்பாளர்களாக மாறுங்கள்!



சென்னை அடையாறில் உள்ள பெட்ரிசியன் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ஜூலை 15, 2019 அன்று காமராசர் பிறந்த நாள் – கல்வி வளர்ச்சி நாள் கருத்தரங்கம் பகல் 11 மணியளவில் நடைபெற்றது. முதல் அமர்வில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், 'கல்விப் புரட்சி' எனும் தலைப்பில் உரையாற்றினார்.

"கல்வியை அனைவருக்கும் வழங்குவதற்கே நமது நாட்டில் ஒரு புரட்சி நடத்த வேண்டியிருந்தது என்றால், அதற்கு என்ன காரணம்? ஜாதிய சமூகமாக நாம் இருந்ததுதான். மனுதர்ம அடிப்படையில் பெரும்பான்மை ஒடுக்கப்பட்ட மக்கள் 'சூத்திரர்கள்' என்று இழிவுபடுத்தப்பட்டு கல்வி உரிமை மறுக்கப்பட்டது. பிறப்பின் அடிப்படையில் மறுக்கப்பட்ட கல்வி உரிமையை நேர் செய்வதற்கு வந்ததுதான் ஜாதியடிப்படையிலான இட ஒதுக்கீடு. ஜாதி அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்குவதற்குக் காரணம் ஜாதியடிப்படையில் திணிக்கப்பட்ட பாகுபாடுகளை ஒழித்து, ஜாதி இல்லாத சமத்துவ நிலையை உருவாக்குவதற்கே தவிர, ஜாதியைக் காப்பாற்றுவதற்கு அல்ல. எனவே கல்விப் புரட்சி என்று பேசும்போது ஜாதிய ஒடுக்குமுறை, ஜாதிய அமைப்புகளையும் குறித்து நாம் பேச வேண்டும். காமராசர் கல்வி உரிமைக்கு வழி திறந்து விட்டார். அந்தக் கல்வி உரிமை கிடைத்தப் பிறகு தான் பள்ளிக் கல்வி, உயர் கல்வி கிடைத்தது. அதனால்தான் ஜாதி மறுப்பு திருமணங்களும் பெருகி வருகின்றன இளைஞர்களாகிய நீங்கள் - ஜாதியம் என்ற அமைப்பிலிருந்து வெளியே வரவேண்டும். ஜாதி ஆணவப் படுகொலைகளை எதிர்க்க வேண்டும். வாழ்க்கைத் துணையரைத் தேடுவது ஒவ்வொரு பெண்ணுக்கும் ஆணுக்கும் உள்ள உரிமை" என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து இலயோலா கல்லூரி பேராசிரியர் முனைவர் ஜா. அமிர்த லெனின் பேசுகையில், "இடஒதுக்கீட்டுக்காக முதன்முதல் இந்திய அரசியல் சட்டத் திருத்தம், திருத்தப்பட்டதையும் தமிழ்நாட்டில் பெரியார் இயக்கம் அதற்காகப் போராடியதையும் செண்பகம் துரைசாமி என்ற பார்ப்பனப் பெண், மருத்துவக் கல்லூரிக்கு மனுப் போடாமலேயே தனக்கு இடஒதுக்கீடு கொள்கையால் மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்காமல் போனது" என்று வழக்காடிய மோசடியையும் விளக்கிப் பேசினார்.

"ஜாதி அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கை மகாபாரத காலத்திலேயே தொடங்கிவிட்டது. ஏகலைவன் என்ற பழங்குடி மரபில் வந்தவன், வில் வித்தைக் கற்றுக் கொள்ள துரோணாச்சாரியிடம் வந்தபோது உனது ஜாதிக்கு வில்வித்தைக் கற்றுத் தர முடியாது என்று அனுமதிக்க மறுத்தார். இது ஜாதி அடிப்படையிலான சேர்க்கை! பிறகு, இப்போது 'அஞ்சலகக் கல்வி முறை' என்று கூறுகிறோமே அந்த வழியில் அந்தக் காலத்தில் தானாகவே துரோணாச்சாரியை குருவாகக் கருதி கொண்டு வில்வித்தை கற்றான். குருவாக உருவகித்துக் கொண்டு கற்றதால் அவனது கட்டை விரலை 'குருதட்சணையாகவே' கேட்டுப் பெற்றவர் துரோணாச்சாரி" என்ற மகாபாரத வர்ணாஸ்ரமக் கொடுமையை எடுத்துக் காட்டி அனைவருக்கும் கல்வி வழங்குவதற்கு வந்த கொள்கைதான்" இடஒதுக்கீடு என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேராசிரியர் அரங்க மல்லிகா, 'பெண் கல்வி' குறித்தும், பெண்களுக்கான சமத்துவம் குறித்தும் உரையாற்றினார். நிகழ்வுகளை தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் பா.ஜ. சுப்ரமணியன் ஒருங்கிணைத்தார். நிகழ்வில் கல்லூரி முதல்வர் உஷா ஜார்ஜ், துணை முதல்வர் கீதா ரூபஸ், தமிழ்த் துறை பேராசிரியர்கள் அகிலா சிவசங்கர், மோ. பேபி பங்கேற்று உரையாற்றினர். 200க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பங்கேற்றனர்.

## சித்தோடு கழகம் எடுத்த காமராஜர் பிறந்தநாள் விழா

திராவிடர் விடுதலைக் கழக ஈரோடு தெற்கு மாவட்டத்தின் சார்பாக கல்வி வள்ளல் காமராஜரின் 117ஆவது பிறந்தநாள் விழா கூட்டம் சித்தோடு நீலிக்கரட்டில் 17.07.2019 மாலை 6:30 மணியளவில் மாவட்டச் செயலாளர் எழிலன் தலைமையிலும் புரட்சிகர இளைஞர் முன்னணி ரங்கசாமி முன்னிலையிலும் நடைபெற்றது. அமைப்புச் செயலாளர் ப. இரத்தினசாமி புதிய கல்விக் கொள்கையின் ஆபத்தைப் பற்றி விளக்கி உரையாற்றினார். அவரைத் தொடர்ந்து சௌந்தர் உரையாற்றினார். தலைமைக் கழகப் பேச்சாளர் கோபி வேலுச்சாமி, காமராஜரின் கல்வி சாதனைகள் குறித்தும், பெரியாரும் காமராஜரும் இத் தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்கு ஆற்றிய பங்களிப்பைப் பற்றியும் சிறப்புரையாற்றி னார். இறுதியாக அப்பகுதியைச் சார்ந்த வேல்மாறன் நன்றியுரை வழங்கினார். வந்திருந்த கழகத் தோழர்களுக்கு வேல்மாறன் மாட்டிறைச்சி உணவு வழங்கினார்.

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

சாகட்டும் என்று கண்டு கொள்ளாமல் விட்டுவிட்டது. சுதர்சன் லோயல்கா என்ற வி.பி. சிங் நண்பர் - பம்பாய் உயர்நீதிமன்றத்தில் பொதுநலன் வழக்குத் தொடர்ந்து, அரசின் அலட்சியத்தைக் கவனத்துக்குக் கொண்டு வந்தார். அதற்குப் பிறகு உயர்நீதிமன்றம் உத்தரவிட்ட பிறகே மகாராஷ்டிரா ஆட்சி, வி.பி.சிங்கை கைது செய்தது. அப்போதுதான் அவரது சிறுநீரகம் பழுதடைந்தது. அதன் தொடர்ச்சியாக வாழ்நாள் முழுதும் போராடி மரணத்தைத் தழுவினார் வி.பி.சிங்" என்றார் விடுதலை இராசேந்திரன்.

நிறைவாகப் பேசிய கழகத் தலைவர் கொளத்தூர் மணி, "காமராசர் அகில இந்தியத் தலைவராக காங்கிரஸ் கட்சியில் இருந்தாலும் வடநாட்டுக்காரர்கள் மாநாட்டில் இந்தியில் பேசியபோது தமிழகத் தலைவர்களும், கன்னடத் தலைவர்களும் தங்கள் தாய்மொழியில் பேசியதை ஆதரித்ததையும் அகில இந்திய தேர்வுகள் தமிழில் நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியதையும் சுட்டிக் காட்டினார். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் பசுவதைத் தடையை வலியுறுத்தித் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று காங்கிரஸ் கட்சியில் உள்ள பார்ப்பன மதவாத சக்திகள் வலியுறுத்தியபோது காமராசர் உறுதியாக மறுத்தார். அதன் காரணமாக நவம். 7, 1966இல் புதுடில்லியில் சங்பரிவார் மற்றும் சாமியார் கும்பல் பயங்கர ஆயுதங்களுடன் டெல்லியில் கலவரம் நடத்தி காமராசர் தங்கியிருந்த வீட்டில் அவரை உயிருடன் எரிக்க திட்டமிட்டு, அவரது வீட்டுக்கு தீ வைத்தது. காமராசர் மயிரிழையில் உயிர் தப்பினார். பெரியார் இந்த நிகழ்வுகளை காமராசர் கொலை முயற்சி சரித்திரம் என்று நூலாக வெளியிட்டார்" என்ற வரலாற்றுத் தகவல்களைப் பகிர்ந்து கொண்டார்

தென்சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் இரா. உமாபதி, மேடை நிகழ்வுகளை ஒருங்கிணைத்தார். புதுச்சேரியிலிருந்து பெரியார் சிந்தனையாளர் இயக்கத் தோழர்கள் தனி வாகனத்தில் வந்து நிகழ்ச்சியில் பங்கேற்றனர். க. சிவா நன்றி கூற 10 மணியளவில் நிறைவடைந்தது.

## ஜாதி மறுப்புத் திருமணம் செய்த மகளைத் தாக்கிய பா.ஜ.க. எம்.எல்.ஏ.

உத்தரப்பிரதேச மாநிலம், பரேலி மாவட்டம், பிதாரி செயின்பூர் தொகுதி பாஜக எம்எல்ஏ-வாக இருப்பவர் ராஜேஷ் மிஸ்ரா. இவர், காதல் திருமணம் செய்து கொண்ட தனது மகள் சாக்ஷி மிஸ்ராவையும் (23). அவரது கணவரும் தலித் வகுப்பைச் சேர்ந்தவருமான அஜிதேஷ் குமாரையும் (29) படுகொலை செய்யப் போவதாக ஏற்கெனவே மிரட்டல் விடுத்திருந்தார்.

"நாங்கள் இருவரும் வயது வந்தவர்கள். விருப்பத்தின் பேரிலேயே திருமணம் செய்து கொண்டோம். எங்களது அமைதியான வாழ்க்கையில் போலீசாரோ அல்லது பாஜக எம்.எல்.ஏ. ராஜேஷ் மிஸ்ராவோ இடையூறு செய்யக் கூடாது" என்று உயர்நீதிமன்றத்தை நாடினர். உயர்நீதிமன்றத்தில் சாக்ஷி தம்பதிக்கு உரிய பாதுகாப்பு வழங்க நீதிபதி சித்தார்த் வர்மா உத்தரவிட்டார். ஆனால், நீதிபதி இவ்வாறு தீர்ப்பு வழங்கிய அடுத்த சில நிமிடங்களில், நீதிமன்ற வளாகத்திற்கு உள்ளேயே, அங்கிருந்த வழக்கறிஞர்களால், சாக்ஷியும், அவரது கணவர் அஜிதேஷூம் சரமாரியாக தாக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பாஜக எம்.எல்.ஏ. ராஜேஷ் மிஸ்ராவின் ஆதரவாளர்கள் என்று கூறப்படுகிறது.

இதனிடையே, அதே நீதிமன்ற வளாகத்தில் மற்றொரு காதல் தம்பதி கடத்தப்பட்ட சம்பவமும் அரங்கேறியுள்ளது. அவர்கள் பதேபூர் பகுதியில் மீட்கப் பட்டு உள்ளனர். 'மிஸ்ரா' பார்ப்பனர்களில் ஒரு பிரிவு என்பது குறிப்பிடத்தக்கது.

### கழகக் கட்டமைப்பு நிதி

**வழக்கறிஞர் ஓ. சுந்தரம் வழியாக...**

| | |
|---|---|
| வழக்கறிஞர் ஓ. சுந்தரம், சென்னை | ரூ. 5,000/- |
| க. காளமேகம், சென்னை | ரூ. 5,000/- |
| பழ. மணி, சென்னை | ரூ. 5,000/- |
| வழக்கறிஞர் இரமேஷ், சென்னை | ரூ. 3,000/- |
| வழக்கறிஞர் துரை | ரூ. 2,000/- |
| ஞானம் இளங்கோவன், சென்னை | ரூ. 2,000/- |
| சுகவனம் | ரூ. 1,000/- |
| ஆக மொத்தம் | ரூ. 23,000/- |

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 26th July 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN